


# பரலோக பொக்கிஷங்கள்

மேலானவைகளையே நாடுங்கள்! (கொலோசெயர் 3:2)



## இந்த குழந்தை, ஓர் அதிசயம்!

எல்லாம் குழந்தைகள், இயேசுவும் ஒரு குழந்தையா? அதிசயமானவர் என்பதல்லவோ அவருடைய நாமம்.

இந்த குழந்தையின் சரித்திரமே அதிசயம்! இவர் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்தவர் என்று மாத்திரம் பேசப்படுகிறவரல்ல. பெத்லகேமில் தோன்றின இந்தச் சிறிய விதை, உலகத்தையே அளாவிநிற்கும் உயிருள்ள மரம்!

உலகத்தில் இதுவரை எத்தனை மாறுதல்கள்! இவரோ என்றும் மாறாதவர்! அவர் இம்மானுவேல், இந்நிமிஷம் வரை அவர் நம்மோடிருக்கிறார்!

பெட்டகம் 40 | டிசம்பர் | பரல்கள் 12

2024



## ‘சுவிசேஷ நற்பணி’ ஏற்பது, நமது அன்பின் கடமை!

நம்மைத் தேடி வந்த இயேசு ஆண்டவர் வழங்கிய அன்பின் இரட்சிப்பை பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசியும், நன்றியுள்ளத்தோடு பிறரைத் தேடி சுவிசேஷப் பணியை நிறைவேற்ற வேண்டியது ‘ஓர் ராஜ கட்டளை’யாகும்! விலையேறப்பெற்ற அவரது ராஜ கட்டளையை ‘எந்த ஒரு மானிடனும்’ மட்டுப்படுத்தவோ அல்லது அவரது கட்டளையை பிரித்து கையாளுவதோ, மிகப் பெரிய தவறு! பிறருக்கு நம் இரட்சகரின் சுவிசேஷத்தை வழங்குவது “உங்கள் உள்ளத்திலிருந்து ஜீவ நதி புரண்டோடும்” என்ற ஆண்டவரின் வாக்குதத்தம் நிறைவேறும் பாக்கியமாகும்!

முன்னோடியான பக்தர்களில் அநேகர், சுவிசேஷக் கூட்டங்கள் மூலமாக இரட்சிக்கப்பட்டதாகவே சரித்திரம் கூறுகிறது! அந்த புள்ளி விபரத்தில், சுவிசேஷ கூட்டங்களின் மூலமாகவே, இன்றுள்ள விசுவாசிகளில் 100-க்கு 62 பேர் கிறிஸ்துவிடம் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இன்றைய இரட்சிக்கப்பட்ட வாலிபர்கள், எவ்விதத்திலும் சோம்பி நின்று விடாதபடி, சுவிசேஷ பிரபல்யத்திற்கென பேரார்வம் கொண்டு, நமக்கு முன் உழைத்த உத்தம ஊழியர்களின் ஸ்தானத்திற்கு வந்து, சுவிசேஷ ஊழியத்தை தங்கள் மேல் விழுந்த ‘அன்பின் கடமையாய்’ ஏற்று, நிறைவேற்றுவது அவசியம், மிகவும் அவசியம்!!

*-Ed*

**2025 ‘பரலோக பொக்கிஷங்கள்’ சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா **ரூ.170**/- தயவுசெய்து உடன் **M.O** செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **டிசம்பர் 25-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் ‘புதிது’ என்று குறிப்பிடவும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall

## கர்த்தருக்கு காத்திருக்கிறவர்கள், வெட்கப்படுவதில்லை!

*நாமாக 'முந்தி' செயல்படுவது, அவிசுவாசம்*

ஓர் வனாந்திர குன்றில் தஞ்சமாயிருந்த *எலியா,* அங்கிருந்த ஆற்று நீரோடையின் கீழ் பாதுகாப்பாய் இருந்தார். ஆகிலும் தேசத்தில் மழை இல்லாத காரணத்தினால் "*சில நாட்களுக்குப் பின்பு அந்த ஆறு வற்றிப்போனது*" என 1இராஜாக்கள் 17:7 கூறுகிறது. இவ்வித நிலையானது, நாட்கள் தோறும், வாரங்கள் தோறும் நீரோடையில் தண்ணீர் குறைந்து வருவதை *எலியா* கண்டபோதும், மனம் தளர்வு இல்லாத உறுதியுடனே, தன் நிலைமையை பார்த்துக் கொண்டிருந்தார்! எலியாவின் மன உறுதியை '**தண்ணீர் குறைந்து வரும் சூழ்நிலை**' சற்று மோதி அசைப்பதைப் போல் தோன்றியது. ஆகிலும், தனக்கும் தேவனுக்கும் இடையே ஓர் சூழ்நிலை தடையாய் வருவதை ஏற்றுக்கொள்ள, *எலியா* மறுத்து விட்டார். சூழ்நிலை கொண்டு வந்த அவிசுவாசத்தை மன உறுதியோடு எதிர்த்து நின்றார்.

> **"சூழ்நிலை மத்தியில் அவிசுவாசம் நம்மை தாக்கிவிட்டால் "ஓர் கார்மேகத்தின் பின்னால் மறைந்திருக்கும் சூரியனை காண்பதைப் போலவே" நமக்கு நிலைமை ஏற்படும்! ஆனால் நிலைகொண்ட விசுவாசம் நமக்கு இருந்தால், அதே சூழ்நிலையாகிய, கார்மேகத்தின் முன்பாக தேவனை கொண்டு வந்து நிறுத்திவிடும்! இவ்வாறு, தேவனை ஊடுருவிச் சென்று, அந்த கார்மேக சூழ்நிலையை நாம் காண்பதே நமது பெலன்!**

குறைந்து கொண்டிருக்கும் அந்த நீரோடை இப்போது பெரிய பெரிய பாறைகளின் அடியில், வெள்ளித் தடம் போல் சென்று கொண்டிருப்பதை எலியா கண்டார். அந்த ஜலமும் குறைந்து, சிறு சிறு குழிக்குள் விழ ஆரம்பித்து விட்டது. வெகுவாய் தண்ணீர் குறைந்து விட்டதினிமித்தம், அந்த நீரோடைக்கு வந்து சேரும் வண்ண பறவைகள் கொஞ்சம் கொஞ்சமாய் குறைந்து மறைந்துவிட்டன! ஆங்காங்கு பதுங்கி நின்று தாகம் தீர்க்க வரும் காட்டு மிருகங்களும் இப்போது அங்கு வருவது இல்லை! உண்மைதான், அந்த நீரோடை இப்போது

*முற்றிலும் வற்றிவிட்டது! அவ்வித கொடிய நிலையிலும், மிகுந்த பொறுமையோடு,* **தன் ஆவியில் சிறிதேனும் கலக்கமின்றி கர்த்தருக்கு காத்திருந்த எலியாவை நோக்கி** *"நீ எழுந்து சாறிபாத் என்னும் ஊருக்குப் போ!" என தேவனுடைய கட்டளை வந்து, அதை ஏற்றுக்கொண்டு தன் ஊழியத்தைத் தொடர்ந்தார்!*

*எலியாவுக்கு ஏற்பட்ட இந்த நிகழ்ச்சி, உங்கள் இருதயத்தை சோதித்து பார்ப்பதை உணர்ந்தீர்களா?:*

> *நம்மில் அனேகர், இந்த எலியாவைப் போல் பொறுத்திருக்காமல் 'முன் கூட்டியே' பல நாட்களுக்கு முன்பாகவே பயத்தையும் கவலையையும் முன் வைத்து, நமக்கென வேறொரு திட்டத்தை வகுத்து, அலைமோதத் தொடங்கி இருப்போம். தண்ணீரின் சலசலப்பு குறைந்து ஓய்வதைக் கண்டு, நம் இருதயத்தின் மகிழ்ச்சி குறைந்து, உதடுகளில் தவழ்ந்து சென்ற மகிழ்ச்சி கீதமும் நின்று இருக்கக்கூடும்! கீதம் பாடிய நமது சுரமண்டல வீணைகளை ஒரு புல்மேட்டில் வைத்துவிட்டு, காய்ந்து போய் கிடந்த புல் மேட்டில் வேதனையோடு அங்குமிங்குமாய் 'என்ன செய்வது?' என்று நாம் தவித்து நடந்திடும் சோகமும் ஏற்பட்டிருக்கக் கூடும்! இவ்வாறு, கஷ்ட சிந்தனையில் மூழ்கி, அந்த சிந்தனையின் சிறைக்குள் அடைபட்டு போனவர்களாய் அனேகர் மாறி விடுகிறார்கள். இவர்கள் தண்ணீர் குறைய தொடங்கிய அந்த நாள் தொடங்கியே "சில திட்டங்களை தங்களுக்கென வகுத்து, அதை கர்த்தர் ஆசீர்வதிக்க வேண்டும்" எனவும் பதட்டத்துடன் ஜெபிக்கத் தொடங்கி விட்டார்கள்! இதுபோன்ற பதட்டமான சிந்தனைக்குள் சிக்கிய பலர், தண்ணீருள்ள இடம் தேடி 'தேவனை மறந்து' வேறிடம் செல்லவும் தொடங்கி விட்டார்கள்!*

மேற்கண்டதைப்போல் கொடிய 'சிக்கலில் சிக்கிக் கொண்டவர்களை' தப்புவிக்க தேவன் வல்லவர்தான்! ஆனால், உங்களை விடுவிக்க வரும் ஆண்டவர், **உங்கள் மீது மகிழ்ச்சியாக இருக்கவில்லை** என்பதை அறிந்து கொள்ளுங்கள். பின் ஏன் விடுவிக்க வந்தார் என்றால் 'அவருடைய இரக்கத்திற்கு முடிவில்லை' என்ற ஒரே காரணம் தான்! இதற்கு மாறாக, நாம் கர்த்தருக்காக மாத்திரம் காத்திருப்பவர்களாய் இருந்தால், உங்களைக் குறித்த தம்முடைய அற்புதமான திட்டத்தை உங்களுக்கு அழகுபட திறந்து காட்டியிருப்பார்! கொடிய சிக்கலான எல்லைக்குள் நீங்களும் போயிருக்க மாட்டீர்கள்!

> "
> **கர்த்தருடைய இரக்கத்தினால், கொடிய சிக்கலில் இருந்து நீங்கள் மீட்கப்பட்டு வந்தால் கூட "நீங்கள் தவறி நடந்து வந்த பாதையை"**

அடிக்கடி நினைவுகூர்ந்து, அந்த பரிதாப நிலைக்காக வெட்கத்தோடு கண்ணீர் விட வேண்டிய பரிதாபம் ஏற்படுவதை, உங்களால் தவிர்த்து விட இயலாது, என்பதை உணருவீர்களாக!

இந்த உண்மைகளையெல்லாம் சுட்டிக்காட்டிய F.B. மேயர் என்ற பரிசுத்தவான், நம் யாவருக்கும் எச்சரித்து வழங்கும் செய்தி யாதெனில்: "ஆகவே ஆத்துமாவே, ஏன் பதறுகிறாய், பொறுத்திரு! கடைசி மட்டும் பொறுத்திரு!" அப்போது நீ ஒருபோதும் வெட்கப்படவே மாட்டாய் என்ற கனிவான எச்சரிக்கையே ஆகும்!

- Mrs.சார்லஸ் கஃவ்மென்

---

## புறங்கூறுதலை கேட்பதும், நம்புவதும் தவறு!

*கப்பலையும் கவிழ்த்திடும் சுக்கான், நமது நாவு*

யுத்தத்தில் செத்து மாய்ந்தவர்கள் ஏராளம்! ஆனால் அதைக் காட்டிலும் தங்கள் நாவினால் வீழ்ந்து மடிபவர்களோ ஏராளம், ஏராளம்!! குறிப்பாக 'புறங்கூறும் நாவு' அதிக அபாயம் கொண்டது! எப்படியெனில், ரோமர் 1:20 முதல் 29 வரை கூறப்பட்ட பகிரங்கமான கொடிய துரோகித கூட்டத்தாரோடு, புறங்கூறுகிறவர்களையும் அவர்களோடு கைகோர்த்தவர்களையும் இணைத்துக் கொண்டதை நாம் எச்சரிக்கையாய் கொண்டு, அக்கொடிய பாவத்திலிருந்து விலகி நிற்போமாக! (வசனம் 30-32).

"இதுவரை செய்த புறங்கூறுதலுக்காகத் துரிதமாய் தேவனுடைய சமூகத்தைத் தேடி அவரின் இரக்கத்திற்காக கெஞ்சி ஜெபியுங்கள். மாத்திரமல்ல, நீங்கள் புறங்கூறிய ஜனங்களிடம் தீவிரமாய் சென்று மன்னிப்பும் கேளுங்கள்!

1கொரிந்தியர் 5:9-13 வசனங்களில், புறங்கூறுதலைக் குறித்துப் புதிய உடன்படிக்கையின் வார்த்தைகள் கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இந்த உடன்படிக்கையின் வார்த்தை யாதெனில்.... "தங்களைச் சகோதரன் அல்லது சகோதரி என்று கூறிக்கொண்டு, இன்னும் தொடர்ந்து புறங்கூறுபவர்களோடு.... சம்பாஷிக்கக்கூடாது, புசிக்கவும்கூடாது!" அதுமாத்திரமல்ல, இங்கு ஓர் கட்டளையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அது யாதெனில், "அந்தப் பொல்லாதவனை உங்களை விட்டுத் தள்ளிப்போடுங்கள்!" புறங்கூறுகிற ஒரு நபர், நல்லவரா? தீயவரா? அல்லது கிறிஸ்துவின் அன்பினால் நெருக்கப்பட்டு பேசுகிறாரா? அல்லது வேறு விதமாய் பேசுகிறாரா? என்றெல்லாம் அலசி ஆராய்ந்து பார்க்கத் தேவையே இல்லை.... நிச்சயமாய் இல்லை!

"அந்தப் பொல்லாதவனை உங்களை விட்டுத் தள்ளிப்போடுங்கள்" அவ்வளவுதான்!

புறங்கூறிவிட்டு, நான் உண்மையைத்தான் கூறுகிறேன் என நியாயப்படுத்திப் பேசுவதெல்லாம், நாம் எவ்வளவாய் பொல்லாங்கினால் நிறைந்து துன்மார்க்கம் செய்கிறோம் என்பதையே நிரூபிக்கிறது! இந்த துன்மார்க்க தீமையெல்லாம் ஜீவனுள்ள தேவனுடைய சபையில் ஒருக்காலும்.... ஒருக்காலும் காணப்படவே கூடாது!

**ஒரு சகோதரனை அல்லது சகோதரியைக் குறித்து ஒருவர் வந்து கூறும் தீமையான செய்தியை நம்புவது முழுக்க முழுக்கத் தவறாகும்.** எனவே, அவர்களின் செய்தியை ஆணித்தரமாக மறுத்திடவேண்டும். இதற்கு மாறாக, நீங்கள் அதை நம்பிவிட்டால், **உங்களுக்குள்ளும் தீமை** குடிகொண்டிருக்கிறது என்பதே நிரூபணமாகி விட்டது. கிறிஸ்துவை சார்ந்த நல்லவர்கள் எவர்களோ, அவர்கள் கட்டாயமாக அதைப் புறக்கணிப்பார்கள்!

*என் ஸ்தல சபையில் ஒரு காரியத்தை பல வருடங்களுக்கு முன்பாக நான் தெளிவுபட அறிவித்திருக்கிறேன். அது யாதெனில்: "யாரேனும் ஒருவர் புறங்கூறுவதற்காகவோ அல்லது அவதூறான கதைகளைப் பேசுவதற்காகவோ என் வீட்டிற்கு வந்தால், அவர் உடனே வெளியே திருப்பி அனுப்பப்படுவார்! அவர்கள் புரிந்த இந்தக் கொடிய செயலுக்காக ஆழமாய் மனந்திரும்பாத பட்சத்தில், திரும்பவும் என் வீட்டிற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்!" என்பதுதான். நான் கைக்கொண்ட இந்த வழிமுறையை நீங்கள் யாவரும் கைக்கொள்ளும்படியாக என் மனமார சிபாரிசு செய்கிறேன். இந்த நடவடிக்கையினால் என் வீட்டாரனைவரும் இப்பொல்லாங்கிலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள்!*

*நீங்கள், பிறரைக் குறித்து கோள் சொல்லியிருந்தால், எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அவரிடம் சென்று அவர்களின் மன்னிப்பைப் பெறுங்கள். அது மாத்திரமல்ல, இவ்விதம்* ***நீங்கள் கோள் சொல்லியதைக் கேட்டவர்கள் யார் யாரோ, அவர்களிடமும்*** *எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாய் எழுத்தின் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சென்று உங்களை மன்னிக்கும்படி கேளுங்கள்!*

*இப்படிச் செய்வதை நீங்கள் மனப்பூர்வமாய் செய்திடுங்கள்.*

*ஏனெனில் இருதயத்தின் ஆழத்திலிருந்து பெருக்கெடுத்துவராத எந்த வார்த்தைகளையும் தேவன் ஒருபோதும் அங்கீகரிப்பதே இல்லை!*

"

**இப்போது, புறங்கூறுதலைக் கேட்டவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? புறங்கூறுதலைக் கேட்டவுடன், அவ்விதம் புறங்கூறியது கணவனோ மனைவியோ, பெற்றோர்களோ, பிள்ளைகளோ அல்லது வேறு யாராயிருந்தாலும், தீமை பேசிய அவர்களை உடனடியாக நிறுத்தியிருக்க வேண்டும். இவ்விதம் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அந்த வீட்டின் தலைவனுக்கே முதல் பொறுப்பு உள்ளது. அவன் அவ்விதம் துரித நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில், வீட்டிலிருக்கும் மற்றவர்களுக்கு அந்த பொறுப்பு கடந்து வருகிறது!**

*நீங்கள் செல்லும் ஒரு வீட்டின் தலைவனோ அல்லது அவர் மனைவியோ புறங்கூறுவார்களென்றால், அவர்களை, முதல் நடவடிக்கையாகக் கடிந்துகொள்ளவேண்டும். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு மாறிவிட்டால், மிகவும் நல்லது! அப்படியில்லையென்றால், உடனடியாக அவர்களின் வீட்டைவிட்டு வெளியேற வேண்டும்!*

*பின்பு, புறங்கூறியவன் ஆழமாய் மனந்திரும்பித் தன்னை முற்றிலும் கழுவிக் கொள்ளும்வரை, அந்த வீட்டில் காலெடுத்தும் வைக்கக்கூடாது! நீங்கள் மாத்திரம் இவ்வித சூழ்நிலைகளில் இதேபோல்* **நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்து விடுங்கள்,** *அதுபோதும்.... உங்களுக்குத் தேவன் தன் உள்ளம் பூரிக்க நீங்கள் எடுக்கும் நடவடிக்கைக்குத் தேவையான தைரியத்தையும் வல்லமையையும் வாரி வழங்கிடுவார்!*

*தன் மந்தைக்காக, உண்மையான அக்கறைகொள்ளும் கர்த்தருடைய ஊழியன் ஒவ்வொருவனும், இந்தக் காரியத்தை தன் இருதயத்தில் மிக ஆழமாய் எடுத்துக்கொள்ளவேண்டும். மேலும், 'புறங்கூறுதல்' பற்றிய செய்தியை முழுமனதாய் சபையில் பிரகடனம் செய்யவேண்டும். சரியாய் விளங்கிக்கொள்ளாதவர்களுக்கு, இந்த செய்தியின் முக்கியத்தை உணர்ந்து, அவர்களுக்கு மறுபடியும் மறுபடியும், 'சோர்ந்து போகாமல்' போதித்து உபதேசிக்க வேண்டும்! இவ்வாறுசெய்யும் ஓர் தேவ ஊழியன், சபையிலுள்ள ஆத்துமாக்களை இரட்சித்து, அவர்களை கர்த்தருக்குள் திடன்கொள்ளச் செய்வதற்கு உதவியவனாவான்! இந்த வல்ல தேவனுக்கே சதா காலமும் சபையில், மகிமை உண்டாவதாக!!*

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

## ‘சுவிசேஷம் அறிவிப்பவன்’ அதற்கு சாட்சியாக இருக்க வேண்டும்!

*தெய்வ அன்பினால் உந்தப்படுவதே சுவிசேஷ ஊழியம்*

**சு**விசேஷம் அறிவிப்பது நம் எல்லோர் மீதும் விழுந்த கடமை! என்பதை நாம் புறக்கணிக்கலாகாது! எழுத்தின் பிரகாரமாய், ஒரு விதையானது, அதை விதைக்கிறவன் யாராயிருந்தாலும், அந்த விதையின் தன்மையின்படியே பலன் தரும்! விதைக்கிறவன் கெட்டவனோ, நல்லவனோ, அத்தி விதை ருசியுள்ள அத்திப்பழம் தான் கொடுக்கும்! ஆனால், வேதாகமத்தில் இயேசு கூறும் ‘விதை’ பலன் தரும் சூத்திரம் முற்றிலும் மாறானது! அதாவது, தேவ வார்த்தையாகிய நல்ல விதையை நல்லவன் விதைத்தாலும், கெட்டவன் விதைத்தாலும்.... விதை நியமனப்படி ருசியுள்ள ‘அத்திப் பழம்’ இருவரின் பலனுக்கும் வராது! “ஒரே பக்தியான தேவசெய்தியை” வெவ்வேறு தேவபக்தி தரத்தின்படி விதைக்கிறவர்களுக்கு ஏற்றபடியே, வெவ்வேறு வித பலன்களை மக்களிடம் கொண்டு வந்து சேர்க்கும்! இப்போது விளங்கிக் கொண்டீர்களா? **‘கிறிஸ்தவம்’ தன்னகத்தே உடையவனின் தரத்தின்படியே பலனை ஈட்டித்தரும்!**

உலகத்தால் கறைப்பட்ட மனதும், ஆவிக்குரிய பழுதடைந்த நிலையும் கொண்ட ஒரு சபை, திரை கடலோடி தூர தேசம் பயணித்து, சுவிசேஷத்தை அறிவித்தாலும்.... அந்த கறைப்பட்ட சபையின் தரத்தின்படியே, அந்த மக்கள் உருவெடுப்பார்கள்! ஆம், ‘வார்த்தையாகிய தேவ வசனம்’ வெறுமனே பலன் தருவதில்லை.... அந்த நற்பலன், அதை அறிவிக்கும் அல்லது சாட்சி பகரும் மனிதனின் அல்லது சபையின் தரத்தை வைத்தே நற்பலன் தரும் என்பதை நாம் யாவரும் அறிந்து, விழிப்புள்ள ஜீவியம் செய்திடக்கடவோம்! இக்கரையில் இவனது ஜீவியம் அல்லது சபையின் தரம் எப்படியோ.... அப்படியே, அக்கரையிலும் விளங்கும்! இது ஓர் மாறாத தெய்வ பிரமாணம்!!

> **“செடியோடு ஒட்டப்படும் கிளையைப் போலவே சுவிசேஷ ஊழியம் உள்ளது. செடி நல்லதாயிருந்தால் மாத்திரமே, ஒட்டப்படும் கிளையும் நல்ல கனி தந்திட முடியும்! அதுபோன்ற மகா உத்திரவாதமான தேவபக்திக்குரிய ஜீவியத்தையே இயேசுகிறிஸ்து இந்த பூமியில் சோதிக்கப்பட்டு வாழ்ந்து, பிறரை சுவிசேஷத்தால் ஆசீர்வதித்தார்!**

இன்றைய சபைகளில் காணப்படும் பிரபல்ய தோற்றமே “உலகமெங்கும் போய் நாங்கள் சுவிசேஷம் அறிவிப்போம்!”

என்பதுதான். ஆனால், சபைகளின் இவ்வித நிலைப்பாடு மிகவும் தவறு! எந்த சபையாய் இருந்தாலும், பிரதானமான முதல்பகுதியே "இவர்கள் ஆவிக்குரிய ரீதியில் தகுதி கொண்டவர்கள்தானா?" என்பதுதான்! "**புறப்பட்டு போங்கள்!**" என ஆண்டவர் கட்டளை பிறப்பித்தது உண்மைதான்.... ஆனால், அதே சமயத்தில் "**காத்திருங்கள்!**" எனவும் கட்டளையிட்டதை காணாத 'கண்மூடிகளாய்' நாம் இருக்கலாகுமா? (மத்.28:19; லூக்.24:49). இப்போது சொல்லுங்கள், எது முதலாவது நிகழ வேண்டும்? ஆம், புறப்பட்டு போவதற்கு முன்பாக, காத்திருப்பதே முதலாவது நிகழ வேண்டும்!

இயேசுவின் சீஷர்கள், பெந்தெகோஸ்தே நாளுக்கு முன்பாக 'மிஷனரிகளாய்' புறப்பட்டு சென்றிருந்தால்.... சொல்லொண்ணா ஆவிக்குரிய சேதம் ஏற்பட்டிருக்குமே! மேற்கத்திய நாடுகள் தொடங்கி, உலகமெங்கும் சென்ற அவர்களின் சுவிசேஷம் "வெகு மோசமான பலனையே" கிறிஸ்துவிற்கு கொடுத்திருக்கும்! புறஜாதியாரிடம் சென்று, தரம் குறைந்த ஜீவியத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது ஒன்றும், கிறிஸ்துவின் கட்டளையை நிறைவேற்றுவதாய் பொருளாகாது! நமது உள்ளம் நடுங்கும் விதமாய் இயேசு உரைத்த வார்த்தைகளைக் கவனியுங்கள்.... "ஒருவனை உங்கள் மார்க்கத்தானாகும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்! பின்பு.... அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்!" (மத்.23:15). இயேசுவின் இந்த வார்த்தைகள் என்னில் நிரந்தரமான "தெய்வ பயத்தைத்" தந்துள்ளது!

இன்றைய சபைகளின் சுவிசேஷ பிரகடன தரம், இயேசு சுட்டிக் காண்பித்த எல்லையிலிருந்து வெகுவாய் சீரழிந்து தாழ்ந்துபோய் கிடக்கிறது! சபைகள் போகிற போங்கினைப் பாருங்கள்.... "உலகமும் அதன் மாசுகளும் அன்றாட நடைமுறை வாழ்விற்கு தேவையே!" எனக்கூறும் கதியில் சரிவடைந்துள்ளது! நம் சுவிசேஷ பாங்கு "சமூக சமரசம்" என தேய்ந்து "ஆவிக்குரிய" ஒப்பற்ற நிலையை இழந்து காணப்படுகிறதே! தனி நபர் தொடங்கி சபை மட்டும் ஆராதனையின் புனிதம், அவர்களின் இஷ்டத்திற்கு பிய்த்து நார் நாராகிப் போய்விட்டது!

> "**இன்று எந்த சபைகளில் "புனிதர்கள்" உருவாகி வருகிறார்கள்? சபையின் உற்பத்தி அனைத்தும் "சினிமா கலையோடு" கைகோர்த்து விட்டதே!**

வியாபார விளம்பரதாரர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றும்

*சபைகளின் ஊழிய அவல நிலை பாருங்கள்! இன்றைய கிறிஸ்தவ வீடுகள், சினிமா கொட்டகையாய் உருமாறி உள்ளதே! கிறிஸ்தவ புனித பத்திரிக்கை ஊழியம், சாரம் இழந்த பதர்களாய் போனதே! இதையெல்லாம் கண்டு துயருற்று அக்கறைப்பட ஒருவரும் இல்லாதது போலவே காணப்படுகிறது!*

*மாற்றம் வேண்டும்.... அது இப்போதே நடைபெற வேண்டும்! ஆதிநிலை போன்ற உத்தம சீஷர்கள் எழும்ப வேண்டும்.... இல்லையேல், இனி அடுத்த இருபது அல்லது மூப்பது ஆண்டுகளில்,* **"உண்மை கிறிஸ்தவன் ஏது?"** *என்ற வெறுமை நிலை ஏற்பட்டுவிடும்! போதும்.... போதும், அரை - குறை கிறிஸ்தவர்களின் உற்பத்தி போதும்! பக்தியின் சீற்றத்தில் எழுந்து, இன்றைய உலகத்தை தலைகீழாய் புரட்டி வாழும் கிறிஸ்துவின் சேவகர்களே இன்றைய நமது அவசரத் தேவை!!*

*- A.W.டோசர்*

---

## தேவ சமூகத்தில் அமரும் எளிமையே, வலிமையானது!

*நம்மோடு 'தனிமை நாடும்' கர்த்தர்*

தீராத வாஞ்சையோடு ஜெப ஜீவியத்தில் வளரும் உங்களுக்கு "தேவப் பிரசன்னம்" இயற்கையானதொன்றாய் மாறிவிடும்! ஆம், ஜெபம் என்றாலே, **தேவனுடைய பிரசன்னத்திற்குள்** பிரவேசிக்கிறோம் என்ற எண்ணம் உங்களில் பதிந்துவிடும். இவ்வாறாகவே, தேவன் தம்முடைய அன்பை நமக்குள் பாய்ந்தோடும் நீரோடையாய் அமைத்துக் கொடுக்கிறார். இதுபோன்ற ஆசீர்வாதத்தை விளக்கிச்சொல்லிட மாளாது! அவ்வளவாய், ஜெபத்தில் தேவனை அனுபவபூர்வமாக ருசிப்பது, பேரின்பமாகும்! 'காலம் செல்லச் செல்ல' தேவன் உங்களுக்கென்று வைத்திருக்கிற அனைத்து ஈவுகளையும் நீங்களே கண்ணாரக் கண்டு ருசிப்பீர்கள்!

உயிருள்ள ஜெபஜீவியத்தை நீங்கள் தொட்டு விட்டபடியால், முன்புபோல் தேவனுடைய பிரசன்னத்தை ஜெபத்தில் ருசித்திட 'நீங்களாகவே பாடுபடும் பிரயாசம்' இப்போது இருப்பதில்லை.

> " **ஜெப ஜீவியத்திலுள்ள ஓர் ரகசியம் யாதெனில், தனிப்பட்ட விதத்தில் தேவனே நம்மிடம் கிரியை செய்ய விரும்புகிறார் என்பதுதான்.**

*இதை அவர் தாவீதுக்கு கூறும்பொழுது "நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்"* என்றார் (சங்.46:10). நாமோ சிருஷ்டிக்கப்பட்டவர்கள்! ஆகவே நம்முடைய சொந்த பணிகளினிமித்தம், உலக மாயைக்குரிய தடுமாற்றம் ஏற்பட கூடும்!

*இதனிமித்தமாய், நாம் அறிவு பூர்வமாய் உணரமுடியாத, உன்னத தெய்வ பிரசன்னத்தில் அமைதியான உணர்வை உணர முடியாமல் சஞ்சலம் ஏற்பட முடியும். ஆகிலும், இவ்வித நேரங்களில் நாம் தொடர்ந்து பழகி, அவரது சமூகத்தில் அமர்ந்திட கற்றுக்கொள்கிறோம்!*

> **"இவ்வாறு கர்த்தருக்குள் நாம் பழகி வருவதால், சிருஷ்டிகர்த்தாவின் கிரியைகள் எவ்வளவு அதிகம் நம்மில் பெருகுகிறதோ, அவ்வளவாய் அவரது கிரியைகள்....நமது சொந்த பிரயாசங்களை அமரச்செய்துவிடும்!**

*எப்படியெனில், சூரியன் உதிப்பதற்கு முன்பாக, நட்சத்திரங்களே அதிக பிரகாசத்துடன் மின்னுவதாக நமக்குத் தோன்றுகிறது! ஆனால், சூரியன் உதித்து அதன் வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாய் வலிமை யடையும்பொழுது, இந்த நட்சத்திரங்களின் வெளிச்சம் காணப் படாததாய் போய்விடுகிறது. ஆம், ஒரு மிகப்பெரிய வெளிச்சம், குறைவான வெளிச்சத்தை தன் அண்டையில் ஈர்த்து கொண்டது என்றே கூற வேண்டும்! இதைப் போலவே, நம் சுயப்பிரயாசத்தில் ஜெபித்திடும் ஜெபமும் ஒப்பாயிருக்கிறது. தேவனுடைய செயலின் வெளிச்சம் மிகப்பெரிதாய் இருப்பதினால், சிறியதாய் மினிங்கிக் கொண்டிருக்கும் நமது சிறிய செயல்களை அவரது செயல்கள் ஈர்த்துக் கொள்கிறது! இவ்வாறாக, நாம் தேவனை அனுபவிப்பதற்காக எடுத்துக்கொள்ளும் அனைத்து பிரயாசங்களும்....* **தேவனுக்குள் ஈர்க்கப்பட்டு,** *பிரிக்க முடியாததாய் மாறிவிடுகிறது.*

*இதைக்குறித்து உள்ள மேன்மை சிலருக்குப் புரிவதில்லை. ஆகவே, இவர்கள் சற்று ஆத்திரத்துடன் "நீங்கள் கூறும் ஜெப ஜீவியம், செயலற்றதாய் தோன்றுகிறது!" எனக் கூறிவிடுகிறார்கள். இவர்கள் கூறுவது தவறு. ஏனென்றால், ஜெப ஜீவியம் என்பது பேச்சில் அல்ல 'அனுபவித்து' கூறுவதேயாகும். ஏனெனில், சுய - முயற்சியை கொஞ்சம் கொஞ்சமாய் இழந்து, தேவனுடைய சமூகத்தை தங்கள் ஜெபத்தில் ருசித்தவர்கள், பூரண வெளிச்சத்தையும் அதைக்குறித்த அனுபவத்தையும் பெற்றிருக்கிறபடியால் 'அந்த அனுபவமே' அவர்களுக்கு விடையாயிருக்கிறது! மெய்யாகவே, இந்த அனுபவத்திற்குரியவர்கள் கண்டதெல்லாம் "***தேவனே முதலாவதாய் பிரயாசப்பட்டு தங்களிடம் வந்தார்***" *என்ற அற்புத செயலே ஆகும். ஆம், சுய பிரயாசம் எவ்வளவோ.... அவ்வளவாய், நாம் தேவனுடைய சமூகத்தை கிட்டிச் சேர இயலாது. "பூரண கிருபை" எப்போதுமே சுயத்தின் வலிமையை, செயலிழக்கச் செய்துவிடும்!*

*தன் தாயின் மடியில் பால் உண்ணும் குழந்தை, ஆரம்பத்தில் தன்*

உதடுகளையும், வாயையும் அசைத்து செயல்பட்டாலும், பால் சீராக வரத் துவங்கியவுடன்.... அமைதியோடு எந்த முயற்சியும் எடுக்காமல், தன் போஷாக்கை பருகிக்கொண்டிருக்கும்! இதற்கொப்பாகவே, ஜெபத்தின் ஆரம்பத்தில் நாம் எடுக்கும் பிரயாசம், அற்ப கிரியை யாகவே இருக்கிறது. செயல்படத் துவங்க வேண்டும்தான்! நாம் தேவன்மீது கொண்ட நேசத்தையும், துதியையும், நம் உதடுகளை அசைத்துக் கூறி ஜெபிப்பது நல்ல துவக்கமே! ஆனால் திவ்விய கிருபையும் போஷாக்கும் புறப்பட்டு வந்தவுடன் 'அமைதியான ஆவியோடு' அதைப் பருகுகிறோம். இந்த கிருபையின் பிரவேசமோ அல்லது தேவனுடைய சமூகமோ தடைப்பட்டால், அந்த குழந்தை செய்வதுபோல் மீண்டும் உதடுகளை அசைக்க வேண்டும்!

**தேவப் பிரசன்னத்தை அனுபவித்திட, சுயத்தின் முயற்சி மேல் ஓங்காமல் 'அமர்ந்திருப்பதையே' தேவன் விரும்புகிறார். அந்த குழந்தை எவ்வளவு அமைதியாய் அமர்ந்திருக்கிறதோ, அவ்வளவு அதிகமாய் தன் போஷாக்கை பெற்றுக் கொண்டிருக்கிறது என்பது திண்ணம்!**

அநேக சமயங்களில், போஷாக்கை உறிஞ்சுக் கொண்டிருக்கும் அந்த குழந்தை முழுவதுமாக தூங்கிப் போய்விடும்!! இவ்வாறாகவே ஜெபத்தில் நம்முடைய ஆவியும், பூரண சமாதானத்தோடு யாதொரு கஷ்டப் பிரயாசமும் இல்லாமல், இளைப்பாறி அமர்ந்துவிட பழக வேண்டும்!

'தேவப் பிரசன்னம்' என்பது பலவந்தமாய் பற்றிக்கொள்ளும் திடப்பொருளல்ல! தேவனோ, சமாதானத்தின் ராஜ்ஜியமாய் இருக்கிறார். அதை அன்பினால் ஈர்த்தே ஆதாயம் செய்திட முடியும். தன்னை ஒருவன் அடைவதற்கு கஷ்டமான பாதை வைத்திட தேவன் ஒருநாளும் விரும்புவதில்லை. அதற்கு மாறாக, **குழந்தையைப் போன்ற எளிய விசுவாச நடவடிக்கையில்** தேவன் பிரியமாயிருக்கிறார். ஆம், மிக மகிமையான ஜெபத்தின் மேன்மையை, இத்தனை எளிதான விசுவாசத்தில் நாம் அடைந்துவிடலாம். சமுத்திரத்தை காண விரும்புபவன், அமைதியான ஆற்றின் எளிய படகில் பயணித்தாலே, சமுத்திரத்தை துரிதமாய் கண்டடைந்திடுவான்!

**தேவனை கண்டடையும், விலையேறப்பெற்ற எளிய ஜெப வாழ்க்கையை நீங்கள் ஏன் இன்னமும் துவங்கவில்லை? சிலுவையில் தன் இரு கரம் விரித்து காத்திருக்கும் அவர்மீது நீங்கள் ஏன் உங்கள் முழுமையும் தந்து இளைப்பாறக் கூடாது?**

உங்கள் முழுமையும் அவருக்குத் தந்துவிட அச்சமா? இயேசு

*உங்களை ஒருபோதும் ஏமாற்றமாட்டார்! நீங்கள் எண்ணியிருக்கும் பரிபூரணத்தைவிட மிக அதிகமாய் தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!*

*இத்தனையையும் கேட்டபிறகு இன்னமும் 'அமர்ந்திராமல்' உங்கள் சுய முயற்சியை நாடுபவர்களாயிருந்தால்...... "உன் சொந்த பிரயாசத்தில் உழன்று வாழ்ந்தாய்.... அது விருதா!" என்று நீ ஏன் சொல்லவில்லை!* **இனி ஆயாசப்படேன், அமர்ந்திருப்பேன்!** *எனக் கூறுவதற்கு என்ன தாமதம்?" என்றே தேவன் நம்மை கடிந்துகொள்வார்! (ஏசாயா. 57:10* Living*). தேவனை அனுபவமாய் ருசிக்கும் ஜெபஜீவியம் உங்களில் ஓங்குவதாக!*

*- மேடம் குயான்*

*(மேடம் குயான் அம்மையாரின் "ஜெபத்தில் தேவனை ருசிப்பது எப்படி?" என்ற அரிய புத்தகம் தபாலில் பெற ₹ 70.00 அனுப்பவும்)*

---

## எம்மை ஆளும்படி பிறந்த ராஜாவே, வாழ்க!

*அதிசயமானவரே, நீரே எங்கள் கிறிஸ்மஸ்*

*இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னே, யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் சிற்றூரில்* **ஒரு குழந்தை பிறந்தது!** *ஆண்பிள்ளை பிறந்ததென்றால் யாருக்கும் சந்தோஷம்தான். ஆகிலும் அவன் பேரெடுப்பானோ ஊரைக் கெடுப்பானோ? பிழைப்பானோ, அழிப்பானோ? ஞானியோ மூடனோ? உபகாரியோ அபகாரியோ? யாருக்குத் தெரியும்? பிறப்பதெல்லாம் பிள்ளையாகுமா? ஒரு குழந்தை இப்படியிருக்கும் என்று யார் சொல்லக்கூடும்? 'கட்டழகா' என்று தாலாட்டிப் பெற்றெடுத்து, கெட்டழிந்த பிள்ளைகள் எத்தனை! 'உலகத்திலுள்ள குழந்தையின்' மேன்மை அவ்வளவாய் மாறிப் போகிறதே!*

***எ**ல்லாம் குழந்தைகள்,* **இயேசுவும் குழந்தையா?** *அதிசயமானவர் என்பதல்லவோ அவருடைய நாமம். அச்சிறிய கண்களில் எவ்வளவு காருண்யம்! எருசலேமைப் பார்த்து கண்ணீர்விட்ட கண்கள் அவையல்லவோ? பேதுருவின் உள்ளத்தை உடைத்த கண்கள் அவையல்லவோ? அச்சிறிய கைகள் குருடருக்குப் பார்வையையும், குஷ்டரோகிக்குச் சுகத்தையும், மரித்தோருக்கு ஜீவனையும் கொடுத்ததே! அச்சிறிய கால்கள் கடலில் நடந்ததுமன்றி, எல்லாருக்கும் நன்மை செய்யும்படி எங்கும் சுற்றித் திரிந்ததே. அந்தச் செல்ல வாயிலிருந்து புறப்பட்ட வாக்கால் தீர்ந்த நோய்கள் எத்தனை! பயந்தோடிய பேய்கள் எத்தனை! ஞான உபதேசங்கள் எத்தனை! அந்த வாயிலிருந்து புறப்பட்ட அதிகாரத் தொனியால்*

*கடலின் கோஷம் அடங்கினது! கல்லறைக்குள் இருந்தவன் வெளியே வந்தான்!*

*பாவிகள் பரிசுத்தரானதும், துன்ப துயரங்கள் இன்பமாய் மாறினதும் மெய்யானால், இது எப்படிப்பட்ட குழந்தையாயிருக்க வேண்டும்?* ***கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப் பின்*** *என்று உலக சரித்திரத்தை இரண்டாகப் பிரித்த இந்த குழந்தை எப்படிப்பட்டது!*

*இவர் அலெக்சாந்தரைப்போல் மகா பெரிய சக்கரவர்த்தியல்ல. ஐசுவரியமுள்ள இலட்சப் பிரபு அல்ல! நெப்போலியனைப்போன்ற யுத்த வீரன் அல்ல. இவர் நாசரேத்தூர் தச்சன்! அப்படியிருந்தும், வானமும் பூமியும் இவர் பாதம் பணிய வேண்டுமானால் இக்குழந்தையின் விசேஷமென்ன?*

இந்த குழந்தையின் சரித்திரமோ அதிசயம்! இவர் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்தவர் என்று மாத்திரம் பேசப்படுகிறவரல்ல. பெத்லகேமில் தோன்றின இந்தச் சிறிய விதை, உலகத்தையே அளாவிநிற்கும் உயிருள்ள மரம்! எத்தனை தலைமுறைகள் தோன்றி மறைந்தன! எத்தனை இராஜ்யங்கள் மாறிப்போயின! எத்தனை இராஜாக்கள் மாண்டு மறைந்தனர்! உலகத்தில் இதுவரை எத்தனை மாறுதல்கள்! இவரோ என்றும் மாறாதவர்!

**இந்நிமிஷம் வரை அவர் நம்மோடிருக்கிறார்!** நமது ஜெபம் கேட்கிறார். நமக்கு வேண்டிய நன்மைகளைக் கொடுக்கிறார். நமது கவலைகளை மாற்றுகிறார். நமது கஷ்டங்களைத் தீர்க்கிறார். நம்மோடு பேசுகிறார். நம்மை ஜீவ பாதையில் நடத்துகிறார். இதுவே கிறிஸ்து மார்க்கத்தின் விசேஷம்! இந்த கிறிஸ்துதாசர், அனைவருடைய நிச்சயமான அனுபவமாயிருக்கிறார்!

> **“**
> **இவர் நான்குபேரைப்போல் உலக இயற்கைப்படி பிறந்தவரல்ல. பிறந்தபோதுதான் இவர் உண்டானவரல்ல. “அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது” (மீகா 5:2). இவர் சர்வத்துக்கும் முன்னிருந்தவர். சர்வத்தையும் உண்டாக்கினவர். சர்வத்தையும் தாங்கி நடத்துகிறவர்!**

தீர்க்கதரிசிகளால் விவரமாய் அறிவிக்கப்பட்டவர்! காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்தில் பிறந்தவர். **ஏசாயா முன்னுரைத்த இம்மானுவேல்! மாம்சத்தில் வந்த தெய்வம்!** மனுக்குலத்தைச் சேர்த்துக்கொள்ளும்படி, மாம்சத்தையும் இரத்தத்தையும் சுதந்தரித்த மனுஷகுமாரன். தேவனோடு நம்மை ஐக்கியப்படுத்தும்படி தேவனுக்குச் சொந்தமான தேவகுமாரன்! ஒரே ஆளாக தனி சிறப்பாய்

வந்த, தேவமனுஷன்! இது பெரிய இரகசியம்! இது பெரிய அதிசயம்! பார்வைக்குப் பலவீனமான குழந்தை.... ஞானப்பார்வைக்குச் சிருஷ்டிகர்த்தா!

எங்களையும், இந்த பாருலகையும் ஆளவந்த எங்கள் ராஜாவே, நீர் வாழ்க! என்ற மாறாத முழக்கமே நமது கிறிஸ்மஸ்! ஆமென்.

- பரமானந்தம் ஐயர்

---

## உன்னதத்தில் அமரச் செய்திடும் 'தாழ்மை!'

*அகந்தை, அகந்த பாதாளம் சேர்க்கும்*

**தா**ங்கள் யூதர் அல்லாதிருந்தும், தங்களை யூதர்கள் என அழைத்துக் கொண்ட சிலரை சத்தியவேதம் சுட்டிக்காட்டுகின்றது. அதுபோலவே, தாங்கள் உண்மையாகவே தாழ்மையற்றவர்களாயிருந்தும், தங்களைக் குறித்து தாங்கள் தாழ்மையின் எண்ணம் கொண்டிருப்பதாக எண்ணிக் கொள்பவர்களும் ஏராளமாய் உள்ளனர்! இவ்வாறு தங்களைத் தாழ்மையுள்ளவர்களாய் கருதி "தாழ்மை..... தாழ்மை" என பேசியே தீர்க்கும் இவர்களின் தாழ்மையற்ற ஆவி 'தேவனுக்கும்' ஆவிக்குரிய உணர்வு பெற்றவர்களுக்கும் 'பளிச்சென' விளங்கிவிடும்!

தேவனோ, மரியாளின் இருதய ஆழத்திற்குள் பொதிந்திருந்த உண்மையான தாழ்மையைக் கண்டார்! எனவேதான், தன் ஒரே பேறான மைந்தன் இயேசு கிறிஸ்துவைப் பெற்றெடுக்கும் பாக்கியத்திற்கு மரியாளே தகுதியுள்ளவள் என்பதை திடமாய் உறுதிசெய்தார்!!

தேவனுக்குத் துதிபாடிய மரியாள், "அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்" என மகிழ்ந்து பூரித்துப்போனாள். தனக்குச் சத்திரத்தில் இடமில்லாமற்போனாலும், தான் பிரசவித்த சிசுவோடு மாட்டுத்தொழுவத்தின் வைக்கோல் புல்லின்மேல் படுத்திருப்பதில், பூரண திருப்தியும் நிறைவான மகிழ்ச்சியும் கொண்டிருந்தாள். தனக்கு "**ஏற்ற இடம்**" கிடைத்தது என்றே அறிந்து நிறைவுற்றிருந்தாள். இதைவிட மேலானதொன்றிற்காய் ஏங்கி அங்கலாய்க்கவே இல்லை! இவ்வித தாழ்மையின் சிங்காரத்திற்குள் தேவன் தன்னை வைத்திட்டாரே என்று தேவன்பால் நன்றியால் உள்ளம் உவந்தாள்! பூரண இளைப்பாறுதலில் உறைவிடம் கொண்டாள்!!

*__த__ன் இதயத்தில் தாபரித்த தாழ்மையினிமித்தமே, மரியாள் தன் ஆவியில் முழு பெலனோடும் கர்த்தரைத் துதிக்க முடிந்தது. அவள் பாடினாள், "தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ்செய்தார். இருதயத்திலும், தன் சிந்தையிலும் அகந்தையுள்ளவர்களைச்*

*சிதறடித்தார்.* ***பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார்.*** *பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்" என பாடிப்பாடி மகிழ்ந்தாள்! (லூக்.1:46-53).*

*இவ்வித தாழ்மை மாத்திரம் போதுமே! அதைக் கொண்டு நாம் பிசாசுகளின் இருளின் வல்லமைகளைத் தகர்த்தெறியலாம்!! ஆனால், இத்தாழ்மையின் சிந்தை குறைவுபடும் அடுத்த கணமே பெருமையும், சகல பொல்லாத தீமைகளும், குறிப்பாய் தேவன் நமக்கென வைத்திட்ட ஸ்தானத்தை முறுமுறுக்கும் ஜீவியமும் உள்ளே பிரவேசித்துவிடும்!* ***ஆவியில் பொதிந்திருக்கும் தாழ்மையின் கீதம் இதுதான்: என் வாழ்வில் தேவன் நியமித்த எல்லா வழிகளுக்காகவும் மனநிறைவோடு, இருதயத்தில் இளைப்பாறுதல் கொண்டிருப்பதே தாழ்மையாகும்!***

அன்னாள் இசைத்திட்ட தாழ்மையின் கீதத்தைக் கேட்டீர்களா? "அவர் **சிறியவனைப்** புழுதியிலிருந்து எடுத்து, **எளியவனைக்** குப்பையிலிருந்து உயர்த்துகிறார். அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்" என பாடிக் கொண்டாடினாள்.

நம்மைக் குறித்த எண்ணத்தில், நம்முடைய பார்வையில் எவ்வளவு ஆழமாய் தாழ.... தாழ இறங்குகிறோமோ, அவ்வளவாய் தேவன் நம்மை நித்தியத்தில் மேலே உயர்த்திடுவார்! எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை இயேசு பெற்றது எங்ஙனம்? ஏனென்றால், அவர் தம்மைத்தாமே தாழ்த்தி.... மரணபரியந்தமும், அதாவது **சிலுவையின் மரணபரியந்தமும் தாழ்மைக்கே கீழ்படிந்தவராய்** இருந்தார் (பிலி.2: 8,9).

> **"தாழ்ந்த சகோதரன் தான் உயர்த்தப்பட்டதைக் குறித்து மேன்மை பாராட்டக்கடவன்" என யாக்கோபு 1:9-ல் கூறினார். ஆம், மேன்மை பாராட்டி மகிழ அவன் ஒருவனால் தான் கூடும். மற்றவர்களுக்கு அந்த தகுதியில்லை!**

இத்தாழ்மையின் சீரிய குணம் கொண்டவனே, மகா உன்னதத்திற்கு உயர்த்தப்பட்டு, தேவனை தரிசிப்பான், அந்த பாக்கியத்தில் அகமகிழ்வான்! அங்கிருந்து சுரந்திடும் இனிய கீதமாய் "தேவரீர், பூமியில் நான் இருக்கும்படி செய்த இடம், என்னை தாழ்மையாய்..... அது, குப்பையாய்! புழுதியாய்! நிந்தையாய்! அவமானமாய் இருந்தாலும், அதுவே எனக்கு 'சிங்கார எல்லையாய்' மாறிவிட்டது! ஏனெனில், உம்மோடு உயர்த்தப்படும் இனிய ஸ்தலம் இது என்றே கண்டேன்!

*மரணபரியந்தம் இந்த ஸ்தானமே எனக்கு உகந்தது! யாதொரு முறுமுறுப்பும், குறைசொல்லும், எனக்கு இல்லை! நீர் வாழ்க!! என பாடிப்பாடி தேவனை மேன்மை பாராட்டி மகிழ்வான்!.... நீங்கள் இருக்கும் ஸ்தானத்தில், இந்த இனிய கீதம் சுரந்து, தொனிக்கிறதா? ஆ, அதுவே பரலோகம்! அதுவே கிறிஸ்துவின் அனுசாரம்!!*

*- கிறிஸ்துவின் அனுசாரம்*

---

## உமது வாக்குதத்தங்கள், எமது அலங்காரம்!

*கொடுத்ததை விட 'கொடுத்தவரே' பேரின்பம்*

*'**ஆ**தியிலே தேவன்' என ஆரம்பிக்கிற "தேவனே" நமக்கு சொந்தமாகும் வாக்குதத்தம்! (ஆதி.1:1). இதன் பிறகு "ஆதியிலே வார்த்தை" என்பது, அவரது வாக்கும் நமது சொந்தமாய் மாறிவிடுகிறது! (யோவான் 1:1). ஆகவே, வெறும் வாக்குதத்தம் என்பதில் வார்த்தை உண்டு, தேவன் இருப்பதில்லை! எனவேதான் "**உமது வாக்குதத்தங்கள்**" என்பதில் வாக்குரைத்த தேவனும் வாக்கு தந்த வார்த்தைகளும் உயிரோட்டமாய் இருப்பதை காண்கிறோம்! வாக்குதத்தங்களை மாத்திரமே நாடும் இன்றைய கிறிஸ்தவம் "கொடுத்ததை கொண்டாடி, கொடுத்தவரை புறக்கணிக்கும்" இடத்திற்குச் சென்றுவிட்டார்கள்!*

*ஒரு உத்தமமான சபை "வாக்குதத்தத்தை விட, வாக்குரைத்த வரையே" எப்போதும் கொண்டாடி மகிழும்! யோபுவைப் பாருங்கள், அவருக்கு தேவனுடைய ஆசீர்வாதத்தில், எல்லா நன்மைகளையும் பெற்றிருந்தார்! ஆகிலும், நம் கிறிஸ்தவ ஜீவியத்தையே 'சவாலாய்' மாற்றிய தாசனாய் அவர் எப்படி விளங்கினார்? கர்த்தர் கொடுத்த எல்லா ஆஸ்திகளும் அழிந்துபோன நேரத்தில், தனது அன்புக்குரிய தொழுகையை விட்டு விலகாமல் "கர்த்தர் கொடுத்தார்! இப்போது, கர்த்தர் எடுத்தார்! கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" என தரையிலே விழுந்து பணிந்து, தொழுது கொண்டார்! (யோபு 1:21).*

> **"இன்றும், "என்னுடைய யாவற்றையும் நீர் எடுத்துக்கொண்டாலும், நீர் என்னைவிட்டு விலகாதிரும்" என அறிக்கை செய்பவர்களே, தேவனுக்குச் சொந்தமான, அவரது அன்புக்குரியவர்கள்!**

*ஒருநாளில், ஆபிரகாமிற்கு தேவன் வாக்கு தந்ததே, விசுவாசத்தின் முதல் வாக்குதத்தம்! அவரது சரீரம் செத்துப்போய் 75-வயது ஆனபோதிலும், நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும் "நீ அனேக ஜாதிகளுக்குத் தகப்பனாவாய்" என்ற தேவனுடைய வாக்குதத்தத்தைக் குறித்து, அவிசுவாசமாய் சந்தேகியாமல், முழு நிச்சயமாய் நம்பி.....*

*விசுவாசத்தில் வல்லவனானான்! (ரோமர் 4:18-21).*

*ஆகவே, "நீர் எனக்குத் தந்த வாக்குதத்தம்" என, ஆபிரகாமிற்கு கூறியதுபோல், கர்த்தர் தனிப்பட்ட உறவில் நமக்கு கூறும் வாக்குதத்தமே "உமது வாக்குதத்தம்" என உயிரோட்டமாய் நமக்கும் மாறுகிறது!*

**"எப்படியெனில், ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குதத்தம் பண்ணினபோது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாதபடியினாலே தமது பேரிலேதானே ஆணையிட்டார்! (எபி.6:13). 'தன்னையே தந்து' வாக்குதத்தம் செய்த விந்தையைப் பாருங்கள்.**

*இந்த விந்தையை அவரது வாக்குதத்தத்தில் கண்ட எந்த ஒரு பக்தனும், காலங்கள் எவ்வளவு தாமதித்தாலும், கர்த்தர் நிறைவேற்றுவார் என்பதில் அசையாத விசுவாசம் கொண்டிருப்பான்!*

*அவர் தமது பேரிலேதானே ஆணையிட்டு வாக்குரைத்த போதும், நாம் "நிறைவான ஆறுதலைப் பெறும்படி" இரண்டு மாறாத விசேஷங்களினால் வாக்குரைத்தார் என எபிரெயர் 6:18 கூறுகிறது: 1) அவரது நாமத்தினால் 2) அவரது வார்த்தையினால் என்ற மாட்சிமையே "எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன்" என்ற உறுதித்தன்மையை நம் யாவருக்கும் விளங்கச் செய்தார்! அந்த 2-விசேஷங்கள் இணைவதுதான் "**உமது வாக்குதத்தங்கள்**" என்ற உரிமையை நமக்கு சொந்தமாக்குகின்றது! இனி முதற்கொண்டு, இத்தனை மேன்மையான "உமது வாக்குதத்தங்கள்" நமது ஜீவியத்தின் அலங்காரமாய் மாறிட, தேவன் யாவருக்கும் கிருபை செய்வாராக!*

*ரோமர் 4-ம் அதிகாரம் நம் யாவரையும் ஆபிரகாமின் விசுவாசத்திற்கு சவாலிட்டு அழைக்கின்றது! 'நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும்' செத்துப்போன அவனது சரீரத்தின் இயலாமை நேரத்திலும்.... இவ்வித துன்ப நேரத்தில், அவரது வாக்குதத்தத்தை பெற்று நாமும் பெலனடையவே, ஆபிரகாமின் விசுவாசம் நமக்கு அருளப்பட்டிருக்கிறது! (ரோமர் 4:18,19). நமதாண்டவர் இயேசுவும் 'ஆபிரகாமின்வித்திலிருந்துவந்தவர்' எனகெம்பீரமாய்பறைசாற்றுகிறது! "நம்முடைய கர்த்தராகிய இயேசுவை* **மரித்தோரிலிருந்து எழுப்பினவர்**" *என்ற ஓங்கிய விசுவாச வார்த்தையை, நமக்கு வாக்குதத்தமாய் தந்தருளி 'இல்லாத' நம் இக்கட்டு நேரங்களில் 'இருக்கிறவைகளைப்போல்' அழைத்து நம்மை தாங்கி நடத்தும் தேவாதி தேவனுக்கே ஸ்தோத்திரம் இன்றும், என்றும் உண்டாவதாக! (ரோமர் 4:24,17). ஆமென்!*

*- T.ரத்தினகுமார்*

## சத்திய சாட்சிக்காய் தூக்கிலிடப்பட்ட போதகர்!

# டைடிரிச் பான்கோபர்



வட ஆப்பிரிக்க கொடிய நாஸிக் படையின் தலைவர் ஹிட்லரை, அன்று ஜெர்மானிய போதகராயிருந்த பான்கோபர் ஆழமாய் எதிர்த்து, தீவிரமாய் ஆண்டவரிடம் ஜெபித்தார். அவரது ஜெபத்தின் நோக்கமெல்லாம் "யூதர்களை அழித்தே தீருவேன்!" என தேவ ஜனத்துக்கு விரோதமாய் சூளுரைத்த அடோல்ப் ஹிட்லரின் தீமையை தேவன் முறியடிக்க வேண்டும் என்பதாகவே இருந்தது! இப்படியொரு போதகர், ஹிட்லருக்கு எதிர்ப்பாய் இருக்கிறார் என்பதை ஹிட்லர் கேள்விப்பட்டவுடன், 1943 ஏப்ரல் மாதத்தின் ஓர் மதிய வேளையில், ஒரு கருப்பு 'மெர்ஸடஸ்' காரில் வந்த இரண்டுபேர், அவரைக் கைது செய்து 'டெகல் சிறையில்' அடைத்தனர்! அந்த சிறையில் இருந்து கொண்டே, தன் வீட்டாருக்கு விசுவாசத்தில் நிலை நிற்கச் செய்யும் உற்சாகமான கடிதங்கள் எழுதினார்!

சிறையில் அடைபட்டிருந்த விசுவாச குடும்பத்தார்களை விசாரித்து, ஆவிக்குரிய போதகங்களால் கட்டி எழுப்பினார்! அவர் சிறையில் செய்த ஊழியங்கள் "இன்று இயேசு நம்முடன் இருந்தால்..." என்ற எதிரொலிப்பின் முழக்கமாயிருந்தது: "ஒரு கிறிஸ்தவன், வெறும் மார்க்க சடங்கை செய்பவனாய் இருந்துவிடக் கூடாது! ஓர் மானிட குணாதிசயத்தில் வாழ்ந்து விடவும் கூடாது! அவனுக்குள் கிறிஸ்து கட்டி எழுப்பும் மனுஷனாகவே இருந்திட வேண்டும்!" என பெரு முழக்கமிட்டார்!

சிறைச்சாலையில், கிறிஸ்துவுக்கு தீப்பிளம்பாய் இருந்த போதகர் 'டைடிரிச் பான்கோபரின்' வேட்கையை, சிறைச்சாலை தண்டனை அணைத்திட முடியவில்லை! 1945 – ஏப்ரல் மாதத்தில் 'நாஸிக் – கேம்பில்' கிறிஸ்துவின் இடைவிடாத சாட்சிக்காக தூக்கிலிடப்பட்டார்! தூக்கிலிடப்படுபவர்களை சோதிக்கும் 'நாஸிக் கேம்ப்' மருத்துவர் தனது அறிக்கையில் கீழ்கண்டவாறு எழுதியிருந்தார்:

"போதகர் பான்கோபரை தூக்கிலிட அழைத்த சமயம், தரையில் முழங்கால்படியிட்டு ஜெபித்துக் கொண்டிருந்தார். ஓர் நேசம் மிகுந்த மனிதராய், தேவனிடம் ஆழமான பக்தியில் ஜெபித்ததைக் கண்டு மனம் நெகிழ்ந்து போனேன்! தூக்கு மேடை ஏறிய பின்பும், ஒரு சிறு ஜெபத்தை ஜெபித்து, தன் தலை நிமிர்த்தினார்! ஆ, எத்தனை தைரியம்! எத்தனை வைராக்கியம்! அடுத்த, சில நிமிடத்தில் அவரது உயிர் பிரிந்தது! என்னுடைய 50 – வருட மருத்துவ பணியில் "தேவனுடைய சித்தத்திற்கு முற்றிலும் அர்ப்பணித்து மரித்த இவரைத் தவிர, நான் யாரையும் கண்டதில்லை!" என உள்ளம் உருக எழுதியிருந்தார்!!

– நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

**வாழ்க்கை மிகச் சிறியது.... சீக்கிரத்தில் இரட்சிப்படைவதே நன்று!**

உலகத்தில் பிறந்த ஒவ்வொருவனும் ஒரு யோவானாகவோ, அல்லது ஒரு யூதாஸாகவோ இருக்கலாம்! ஒரு பவுலாகவோ அல்லது ஒரு பிலாத்தாகவோ இருக்கலாம்! பயனுள்ள வாழ்க்கையோ அல்லது வீண் வாழ்க்கையோ நடத்தக்கூடும்! இன்பத்தையோ அல்லது துன்பத்தையோ பிறர்க்குக் கொடுக்கக்கூடும்! இவைகளை நாம் சிந்திக்கும்பொழுது, வாழ்க்கை என்பது நம்மிடம் நல்ல நம்பிக்கை யோடு கொடுக்கப்பெற்ற புனித உடைமை என்றும், அதை வீணடிக்காமல் நல் வழியில் பயன்படுத்த வேண்டும் என்றும் உணர்கிறோம்!

அமெரிக்காவிலிருந்த குவேக்க கிறிஸ்தவர், ஸ்டீபன் கிரைல்லட் எழுதிய பின்வரும் குறிக்கோளை, இங்கிலாந்து மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் தமது மேஜையின்மேல் வைத்திருந்தார். "இந்த உலகத்தை நான் ஒரே ஒரு முறைதான் கடந்து செல்லுவேன்; ஆகையால் நான் பிறருக்குச் செய்யக்கூடிய நன்மையை ஒத்திபோடாமல் அல்லது அதைப்பற்றிக் கவலையற்றவனாய் இராமல், இன்றே செய்வேனாக! வாழ்க்கை ஒருவழிப் பாதையாக அல்லவோ இருக்கிறது. வழ்க்கையின் இந்த தன்மையை "ஒரு அச்சம் தரும் குறுகிய ஒரே வழிப் பாதை" என மிகவும் வலியுறுத்தி கூறினார்!

"ஒரே ஒரு வாழ்க்கை" என்னும் எச்சரிக்கை, என்றும் நம் செவிகளில் தொனிக்கட்டும். அது, நம் வாழ்க்கையை சீர்திருத்தட்டும். இதை உணரும்போது, இப்போது நாம் மேற்கொண்டுள்ள தொழிலும், எதிர்காலத்தைக் குறித்த நம் திட்டங்களும், நமது ஆசையும் தகுதியானவைதானா? என்பதை ஆராய்ந்தறிய வேண்டும். காலம் குறுகியது என உணர்த்தவே "வாலிபனே, இந்த இளம் நாட்களிலேயே உன் சிருஷ்டிகரை நினைந்து" மனம் திரும்பி வாழ்ந்திடு என வேதம் நம்மை வேண்டிக் கூறியுள்ளது!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by:
Madurai Christian Fellowship, Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.